கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்



www.newwisdomministries.com

ஞானம் 5 – ஒலி 28

10-07-2022



# புதுச் சிந்தனை...
# புதுப் பிறப்பு...



# வெவரமாய் இருந்தால், வினாடிகளில் விந்தைகள்...



அருட்பணி.சைமன் பீட்டர்

அன்பிற்கினிய சகோதர, சகோதரிகளே வணக்கம். நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களுக்கு நிறைவாய் இருக்க வாழ்த்துகின்றேன்.

ஜீலை மாதம் 10ம் தேதியன்று அகில உலக புத்தாற்றல் விடுதலை தினத்தை கொண்டாடுகின்றோம். அதாவது, அதை Global Energy Independence Day என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்.

நாம் பயன்படுத்தும் வழக்கமான ஆற்றல்களைத் தாண்டி, அதற்கு மாற்றாக புதுப்புது இயற்கை ஆற்றல்களை கண்டுபிடித்து மனித குலத்துக்கு அறிமுகப்படுத்த இந்த புத்தாற்றல் விடுதலை தினம் அளவில்ல ஊக்கத்தை தருகின்றது. அதன் அடிப்படையில்தான் சூரிய சக்தியைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க உதவும் சோலார் பேனல்கள் கண்டுபிடிக்கப்பட்டது. அதே போன்று காற்றைப் பயன்படுத்தி காற்றாலைகளின் நிர்மானம் மூலம் மின்சாரம் தயாரிக்க முடிந்தது. தண்ணீரைப் பயன்படுத்தி வாகனத்தை இயக்க முயற்சி எடுத்தல், மூலிகை பெட்ரோல் தயாரித்தல் போன்றவை இந்த நாள் தரும் ஊக்கத்தினாலும், தூண்டுதலினாலும் வந்த புது முயற்சிளாகும்.

புதுப்புது எரிசக்திகளைக் கண்டுபிடித்தலுக்கான வாய்ப்புகளும், அரசாங்கத் திட்டங்களும் உருவாகி வருகின்றன.

கேஸ், பெட்ரோல், டீசல் போன்ற எரிவாயுக்களின் விலை உயர்வினால் ஏற்பட்ட பொருளாதார சிக்கலினால் புதுப்புது மாற்று எரிசக்திகளை மனிதர்கள் கண்டுபிடித்து வருகின்றார்.

சமீபமாக மின்விசறி பொருத்தப்பட்ட அடுப்புகள், அதிக செலவில்லாமல், விரைவாக சமைக்க உதவுகின்றதால், அது மக்கள் மத்தியில் அதிக வரவேற்பைப் பெற்று வருகின்றது.

கடந்த காலத்தில் அப்படிப்பட்ட புதுச் சிந்தனைகள் வரவேற்கப்பட்டதால்தான், வெட் கிரைன்டர், மின் விசிறி, ஐயர்ன் பாக்ஸ், பிரிட்ஜ், வாசிங் மெசின், எல்இடி பல்புகள், யுபிஎஸ் பேட்டரிகள், பேட்டரியினால் இயங்கும் கார்கள், இரு சக்கர வாகனங்கள் தயாரிப்பில் வேகம் எடுத்திருக்கின்றன. வருங்காலங்களில், பெட்ரோல், டீசல் போன்றவற்றின் பயன்பாட்டுக்கே தேவையே இல்லாது போய்விடும் நிலை உருவாகிவருகின்றது.

மின்சார வாகனங்கள்தான் இனி சாலைகளில் ஆதிக்கம் செலுத்தப்போகின்றன. உலகை மாசுபடுத்தாத, மற்றும் செலவு குறைந்த, அதிக பலன் தரக்கூடிய எரிசக்திகளின் கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தவே இந்த நாள் ஒவ்வொருவருடமும் கொண்டாடப்படுகின்றது.

இதைத்தான் மாத்தி யோசி என்று சொல்வார்கள். இந்த வழி கடினமாகவும், வீணானதாகவும் இருந்தால், மாற்று வழியைக் கண்டுபிடிப்பதே புத்திசாலித்தனம். அப்படி சிந்தித்தனால்தான் அனைத்தும் நவீனமாகிக் கொண்டேயிருக்கின்றது. ஒவ்வொரு பொருளின் புதுப்புது மாடல்கள் அதாவது வெர்ஷன்கள் வந்து கொண்டேயிருக்கின்றது.

ஒவ்வொரு வினாடியும் அனைத்தும் புதுப்புது வடிவமெடுத்துக் கொண்டேயிருக்கின்றது. புதுமைக்கும், நவீனத்திற்கு எல்லையே இல்லை. எதுவும் நிரந்தரமில்லை.

கம்யூட்டர் துறையில் இருப்பவர்கள், அனுதினமும் அதன் வளர்ச்சியை, மாற்றங்களை அறிந்துகொண்டு அதற்கேற்றவாறு தன்னை புதுப்பித்துக் கொண்டேயிருந்தால்தான் அவர்களுக்கான வேலை நிரந்தமாயிருக்கும். இல்லையென்றால் அவர்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள்.

செருப்பிலிருந்து, தலைமுடி வரைக்கும் அனைத்தும் மாடர்னாகிக் கொண்டே செல்கின்றன.

இன்று ப்யூட்டி பார்லர் மனித தோற்றத்தையும், மாடர்ன் பேஷன் டிசைன்கள், உடை கலாச்சாரத்தை எப்படியெல்லாம் மாற்றியுள்ளது.

காலம் நவீனமாகிக்கொண்டே இருக்கின்றது. அவ்வாறு மனிதனும் மாறிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் மனித மனங்களில் அழுத்தம் கொடுப்பதால், மனித குலம் எப்போதும் ஒரு பரபரப்பிலேயே ஓடிக்கொண்டே இருக்கின்றது.

நவீனமாகாத எதுவும், நக்கலடிக்கப்படும் காலம் இது. ஆகவே வெளியுலகிற்குப் பயந்து, அல்லது உலகோடு ஒத்து வாழ வேண்டும் என்ற ஆர்வத்தாலும் அனைவரும் புதுப்புது வடிவமெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்கப்பட முடியாததாகிவிட்டது.

தூங்கும் மனித மனத்தை இது தட்டி, அல்லது உலுக்கு எழுப்புகின்றது. நீயும், சளைத்தவனல்ல, நீயும் ஓடு... ஓடிக் கொண்டேயிரு என்று உசுப்பேத்தும் சுற்றுப்புற சக்திகள் ஏராளம்..ஏராளம்.

பல சமயம் புலியப் பாத்து சூடு போட்டக் கதையாகவும் போய்விடக்கூடிய அவலம் ஏற்படுகின்றது. அதே சமயம், புதுவித மாற்றங்கள் புதுவித மாற்றுச் சிந்தனைகள், இப்படியும் வாழலாமா, ஓ இதுவும் நன்றாய் இருக்கின்றதே... இத்தனை காலம் ஏமாந்து போனோமே என்ற சிந்தனைகளும் நமக்குள் எழாமல் இருந்ததில்லை. எது எப்படியானாலும், மாற்றுச் சிந்தனைகளே நமக்கு பல சிக்கல்களிலிருந்து விடுதலை தருகின்றது.

செக்கு மாட்டுச் சிந்தனையும், வாழ்க்கை முறையும் எந்தவிதப் பலனையும் தராது. ஆனால் நல்ல வாழ்க்கை முறைகளை கைவிடாது வாழ்வதுகூட செக்கு மாட்டு வாழ்க்கை முறை என்றாலும் ஓல்டு ஈஸ் கோல்ட் என்று சொல்வது தப்பேதுமில்லை.

உதாரணமாக நம் பெரியோர்கள் சிறு தானியங்களைத்தான் அதிகமாக சாப்பிட்டார்கள். அதிகமாக உழைத்தார்கள். நோய்நொடி இல்லாமல் வாழ்ந்தார்கள், அப்படியும் வருகின்ற நோய்களைத் தீர்க்க, இயற்கை மருந்துகளையே பயன்படுத்தினார்கள். நீடிய ஆயுளோடு வாழ்ந்தார்கள்.

இன்று மனிதர்களின் வாழ்நாள் 60க்குக் வந்துவிட்டது. 100 வயது வாழ்ந்த நம் முன்னோர்களைப் போல நாம் ஏன் வாழ முடியவதில்லை. ஒருகாலத்தில் உணவே மருந்தாய் வாழ்ந்தார்கள். இன்று மருந்தே உணவாய்ப் போனதே. அதற்கு மாற்று என்ன என்ற சிந்தனை இந்த அகில உலக மாற்று சக்திக்கான சுதந்திரச் சிந்தனைகளின் தூண்டுதலால், நாம் ஏன் மீண்டும் நம் முன்னோர்கள் பயன்படுத்திய உணவு முறைகளைக் கையாளக் கூடாது என்று சிந்திக்க ஆரம்பித்ததால் இன்றைய நவீன இளைஞரகள் சிறுதானிய உணவுகளை விரும்பிச் சாப்பிட ஆரம்பித்து ஆரோக்கியமாக வாழ்கின்றார்கள். அத்தகைய உணவை வழங்குகின்ற உணவு விடுதிகளும் ஏராளமாகப் பெருகிவிட்டன.

இதுதான் மாத்தி யோசி என்ற தூண்டுதலின் விளைவு.

கவலைப் படுகின்றவர்கள், எப்போதும் தங்கள் மனதில் உள்ள காயங்களுக்குக் காரணமான அனைத்தையும் திரும்பத் திரும்ப் யோசித்துக் கொண்டேயிருப்பார்கள். அது யோசிக்க யோசிக்க பெரிதாகிக்கொண்டே இருக்கும். நாம்தான் அதற்கு உருவத்தையும், சக்தியையும் தருகின்றோம் என்ற நினைவில்லாமல், மீண்டும் மீண்டும் அந்தத் தவறையே செய்து கொண்டேயிருப்போம்.

உண்மையில் அந்தப் பிரச்னை ஒரு பிரச்னையா, அல்லது நாம்தான் தேவையில்லாமல் அதை பிரச்னையாய் நினைத்திருக்கின்றோமா என்று சிந்திப்பதுதான் மாற்று சக்தியைக் கண்டுபிடிக்க புதுச் சிந்தனையைத் தந்து அந்தப் பிரச்னையை தூக்கி எறியக் கூடிய மாற்று சக்தியை இத்தகைய நாள் நமக்குத் தருகின்றது.

ஒருமுறை மூன்று கணித மேதைகளையும், ஒரு சாதாரண மனிதரையும் ஒரு அறையில் வைத்து பூட்டி விட்டார்கள். அவர்களுக்கு ஒரு சிக்கலான கணக்கு கொடுக்கப்பட்டது. அந்தக் கணக்கை சரியாக செய்து முடித்தபிறகு வருகின்ற விடையில் வரும் எண்களை சரியாக பயன்படுத்தி அந்தக் கதவை திறக்க முடியும் என்று ஒரு நிபந்தனையோடு ஒரு போட்டியும் வைத்தார்கள்.

அங்கிருந்த அனைவரும் அந்தக் கணக்கை போட ஆரம்பித்தார்கள். அந்தப் போட்டியில் எப்படியாவது விடை கண்டுபிடித்து முதலில் கதவைத் திறந்து இந்தப் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்று அவர்கள் அனைவரும் பரபரப்பாக இயங்கினார்கள்.

அந்த நாள்வரில் அந்த சாதாரண மனிதர் வெகு நேரம், அந்தக் கதவையே பார்த்துக் கொண்டிருந்தார். சற்று யோசித்தவாறு எழுந்து போய் அந்தக் கதவை வெளிப்புறமாகத் தள்ளினார். அப்போது அந்தக் கதவு திறந்து கொண்டது. அப்போது அங்கிருந்தவர்கள் அவரைப் பாராட்டி கை தட்டினார்கள். அந்தக் கதவை நாங்கள் பூட்டவே இல்லை என்று சொன்னார்கள்.

முதலில் அவர்களுக்கு ஒருவித பயத்தையும், தேவையற்ற எண்ணங்களையும் அவர்களுக்குள் புகுத்தினார்கள். சிக்கலான கணக்குப் போட்டி, கதவை திறக்க அந்த விடையே இரகசிய எண்கள், என்ற தேவையற்ற பரபரப்பை ஏற்படுத்தினார்கள். எப்படியாவது தாங்கள் வெற்றி வெற வேண்டும், இது மானப் பிரச்சினை என்று அனைவரும் முடுக்கி விடப்பட்ட பொம்மையைப் போல இயந்திரத் தனமாக இயங்கினார்கள். ஆனால் அந்த சாதாரண மனிதன், தன்மீது சுமத்தப்பட்ட எந்தவித பரபரப்பிலும், நிர்பந்தத்திலும் சிக்கிக் கொள்ளாமல், நிதானமாக யோசித்தார்.

இந்தப் போட்டியில் கதவைத் திறக்க வேண்டும். சரி அந்தக் கதவு முதலில் பூட்டியிருக்கின்றார்களா இல்லை என்று யோசிப்போம். என்று யோசித்து அவர் அந்தக் கதவை திறக்க முயன்றார். அவரது யோசனை சரியாக இருந்தது. எந்தப் பிரச்னையானாலும் அதை நிதானமாக ஆராயும் அவரது பழக்கமும், விவேகமும் அவருக்கு வெற்றியைத் தந்தது.

ஒரு பிரச்னையைச் சந்திக்கின்ற போது, அதனால் பதற்றம் அடையாது, முதலில் அது உண்மையிலேயே பிரச்னையா, அல்லது நாம் அதை பிரச்னையாக பார்க்கின்றோமா என்று யோசிப்பதுதான் திங்கிங் அவுட் அஃப் த பாக்ஸ், Thinking out of the Box அதாவது மாத்தி யோசிக்கும் பக்குவம் என்று சொல்வார்கள்.

பிரச்னைக்குள் இருந்தால் அது நம்மை ஆட்டிப் படைக்கும். ஆனால் பிரச்னையை வெளியிலிருந்து அதை விமர்சனக் கண்ணோட்டத்தோடு பார்த்தால், அதன் சுயரூபம், அதன் இயல்பு, அதன் வண்டவாளம் அனைத்தையும் அறிந்து கொள்ள முடியும். அதைத் தீர்க்கக்கூடிய வழியும் எளிதாகவே இருக்கும். சாவில்லாமல் எந்தப் பூட்டும் தயாரிக்கப்படுவதில்லை. அமைதியான மனமும், நிதானமும் எந்தச் சிக்கலையும் தீர்க்கும்.

ஒரு நிறுவனத்திற்கு ஒரு மேலாளர் தேவை என்று விளம்பரம் செய்தார்கள். நூற்றுக்கணக்கானோர் அதற்கு விண்ணப்பித்திருந்தார்கள். அவர்கள் அனைவரையும் ஒரு குறிப்பிட்ட நாளில் நேர்முகத் தேர்வுக்கு அழைத்திருந்தார்கள். நேரம் தவறாது அவர்கள் அனைவரும், ஏன் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே வந்துவிட்டார்கள். அவர்களுக்கு ஒரு எழுத்துத் தேர்வு வைத்தார்கள் அனைவரும் அவரவருக்கு ஓர் ஒட்டப்பட்ட ஓர் உறை கொடுக்கப்பட்டது. அந்தத் தேர்வை நடத்தியவர்கள் நிபந்தனை என்னவென்று சொன்னார்கள். அதாவது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உறையில் 50 கேள்விகள் அடங்கிய கேள்வித்தாள் கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு சரியானதைத் தேர்வு செய்து ஐந்து நிமிடத்திற்குள் யார் எழுதி முடிக்கின்றார்களோ அவர்களுக்கே இந்த மேலாளர் பதவி கிடைக்கும் என்று சொல்லி மணியடித்தார்கள். அனைவரும் மிகவும் பரபரப்பாக அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் எழுத ஆரம்பித்தார்கள். ஆனால் ஒரே ஒருவர் மட்டும் மூன்றாவது நிமிடத்தில் அந்த கேள்வித்தாளை மடித்து தேர்வை நடத்தியவர்களிடம் கொடுத்துவிட்டார். அவர் மிகவும் சரியாக செயல்பட்டதால் அந்தப் தேர்வில் அவரே வெற்றி பெற்றார் என்று அறிவித்து, அவரையே அப்போதே மேலாளராக அறிவித்தார்கள்.

தேர்வு எழுதிய அனைவரும் அவரை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அதெப்படி மூன்று நிமிடத்துக்குள் அவர் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலெழுதி வெற்றி பெற்றார் என்று குழம்பிப் போய் நின்றார்கள்.

அப்போது தேர்வை நடத்தியவர், அதற்கான பதிலைச் சொன்னார். உங்களுக்குத் தரப்பட்ட கேள்வித் தாளின் 50வது கேள்வி, அனைத்தையும் கேள்விகளுக்கும் பதில் தர வேண்டாம், படித்து முடித்தவுடன் கேள்வித் தாளை திருப்பித் தந்துவிடுங்கள் என்று எழுதப்பட்டிருந்தது. அதன்படி இவர் அனைத்துக் கேள்விகளையும் படித்தார், உடனே அதைத் திருப்பித் தந்துவிட்டார்.

அவரது விவேகத்திற்கும், சமயோஜிதமான யோசனைக்கும், எதையும் ஆராய்ந்து, புத்திசாலித்தனத்தோடு அணுகும் திறமைக்காக அவர் இந்த மேலாளர்ப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று சொன்னார்.

இதுதான் மாத்தி யோசிக்கும் திறன். யோசி...மாத்தி யோசி...புதிதாக யோசி என்ற மாற்று வழிச் சிந்தனையே இன்றைய தேவை.

அதைத்தான் தனி மனித வாழ்வுக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் தேவை, அதை ஊக்கப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் தான் ஜூலை 10ம் தேதி அகில உலக மாற்று சக்தி தேடும் சுதந்திர நாள் கொண்டாடப்படுகின்றது.

அவ்வாறு சிந்தித்ததன் விளைவாகத்தான் எழுத்துவடிவில் வந்த ஞான ஒலி பத்திரிக்கையைப் பற்றி யோசித்தபோதுதான். நமது பத்திரிக்கையின் பெயரே ஞான ஒலி...அதை ஏன் ஒலி வடிவமாக (ஆடியோ மேகசினாக) வாசகர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று யோசித்து, பல கடுமையான உழைப்பின் மத்தியில் இதை வெளிக்கொணர்கின்றோம்.

நவீனமாகிக் கொண்டே இருக்கும் எதுவும், அது எழுத்தாகட்டும், உடை, உணவு, கலைகள், அனைத்துமே, களத்தில் நிற்கும், உற்சாகத்தைத் தந்து கொண்டேயிருக்கும். அப்போதுதான் வாழ்க்கை சுவாரசியமாக இருக்கும்.



# விவிலியம் அறிவோம் – 46

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## போத்திபாரின் வீட்டில் யோசேப்பு

தனது சகோதரர்களால் அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு எகிப்திற்குக் கொண்டு செல்லப்படுகிறார். ஆவரை பார்வோனின் மெய்க்காப்பாளர் தலைவனும் படைத் தலைவனுமான போத்திபார் என்ற எகிப்தியன் இஸ்மயேலரிடமிருந்து விலைக்கு வாங்கித் தனது வீட்டிற்குக் கொண்டு வருகிறார். யோசேப்பு போத்திபாரின் வீட்டில் அடிமையாக வாழ்ந்தபோது, ஆண்டவர் யோசேப்புடன் இருந்தார் என விவிலிய ஆசிரியர் பதிவு செய்கிறார். யோசேப்பு கதை முழுவதிலும் ஆண்டவர் அவருடன் இருந்து யோசேப்பை வழிநடத்துகிறார்; ஆனால் அதை ஆசிரியர் அவ்வளவாகப் பதிவு செய்யவில்லை. ஆனால் தொடக்கநூலில் இப்போது நாம் வாசிக்கின்ற 39வது பிரிவில் ஆறு தடவைகள் ஆண்டவர் பற்றிய குறிப்புகள் வருகின்றன. இதை விடுத்து தொநூ 49 : 18 இல் மட்டுமே ஆண்டவர் குறிப்பிடப்படுகிறார். ஆனால் கடவுள் என்ற சொல் யோசேப்பு கதையில் பல இடங்களில் வருகிறது. போத்திபாரிடம் அடிமையாக வாழ்ந்த காலத்தில் ஆண்டவர் அவரோடு இருந்ததால் அவர் தொட்ட காரியங்கள் அனைத்தும் துலங்கியது. இதை போத்திபாரும் கவனிக்கிறார்.

தனது தலைவனின் பார்வையில் யோசேப்பிற்குத் தயைக் கிடைக்கிறது. யோசேப்பைத் தன் சிறப்புப் பணியாளராகவும், வீட்டின் மேலாளராகவும் போத்திபார் நியமிக்கிறார். தனக்கிருந்த அனைத்தையும் யோசேப்பின் பொறுப்பில் ஒப்படைக்கிறார். யோசேப்பும் தனது பொறுப்பை உணர்ந்து செயல்படுகிறார். இதனால் போத்திபாரும் ஆண்டவரால் ஆசிர்வதிக்கப்படுகிறார். போத்திபாரின் வீடு ஆசிர்வதிக்கப்படுகிறது.; அவருடைய வயல்வெளிகள் மிகுந்த விளைச்சலைக் கொடுக்கின்றன. எல்லா விதத்திலும் போத்திபாரும் அவரது குடும்பமும் ஆண்டவரால் ஆசிர்வதிக்கப்பட்டதாக இருக்கிறது. யோசேப்பின் பொறுப்பில் தனக்கிருந்த அனைத்தையும் ஒப்படைத்த பின், தான் உண்ணும் உணவைத் தவிர வேறெதைப் பற்றியும் அவன் விசாரிக்கவில்லை என்ற சொற்கள் போத்திபார் யோசேப்பின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை வெளிப் படுத்துவதாக உள்ளது. வாழ்க்கை மகிழ்ச்சியானதாகச் சென்று கொண்டிருக்கும் போது பிரச்சினை ஒரு பெண் வடிவில் வருகிறது. யோசேப்பு நல்ல உடற்கட்டும் அழகிய தோற்றமும் கொண்டவராக இருந்தது பிரச்சினையை இன்னும் அதிகரிக்கச் செய்கிறது. யோசேப்பின் தலைவனான போத்திபாரின் மனைவி யோசேப்பின் மீதுமையல் கொள்கிறாள்; யோசேப்பை தனது இச்சைகளுக்குப் பணியவைக்க விரும்புகிறாள். யோசேப்புடன் உடலுறவு கொள்வது அவளது நோக்கமாக இருக்கிறது.

பல நாட்களாக யோசேப்பின் மீது மோகம் கொண்டிருந்த அவள் ஒருநாள் யோசேப்பிடம், என்னோடு படு என வெளிப்படையாகக் கேட்கிறாள். போத்திபாரின் மனைவி யோசேப்புடன் உரையாடுவதைப் பார்க்கும்போது அவள் ஒரு அடிமையிடம் பேசுவதைப் போலவே யோசேப்புடன் பேசுகிறாள். யோசேப்பு அவளுடைய விருப்பத்திற்கு இணங்கவில்லை. தனது தலைவருக்கு எதிராகவும், கடவுளுக்கு எதிராகவும் பாவம் செய்ய அவர் விரும்பவில்லை. போத்திபாரின் மனைவியுடன் அவர் கூறுகின்ற வார்த்தைகள் இதை உறுதிப்படுத்துகின்றது.

என் தலைவர் எல்லாவற்றையும் என்



பொறுப்பில் ஒப்படைத்துவிட்டார். வீட்டிலுள்ள எதைப்பற்றியும் அவர் விசாரிப்பதுகூட இல்லை. இந்த வீட்டில் என்னை விட அதிகாரம் பெற்றவர் ஒருவருமில்லை. நீங்கள் அவருடைய மனைவியாயிருப்பதால், உங்களைத் தவிர வேறெதையும் அவர் என்னிடம் ஒப்படைக்காமல் இருக்கவில்லை. இந்த மாபெரும் தீச்செயலைச் செய்து, கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்யலாமா? (தொநூ 39:8-9) என வினவுகிறார். போத்திபாரின் மனைவியும் யோசேப்பை வெறுமனே விடவிரும்பவில்லை; மீண்டும் மீண்டும் அவரைத் தொந்தரவு செய்கிறாள். நாள்தோறும் அவரை வற்புறுத்துகிறாள். யோசேப்பு தனது நிலையில் உறுதியுடன் இருக்கின்றார். அவளுடைய வற்புறுத்தலுக்கு அவர் சிறிதும் அசையவில்லை. நாள்கள் நகர்கின்றன. ஒருநாள் யோசேப்பு தன் வேலையை முன்னிட்டு வீட்டிற்குள் செல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. போத்திபாரின் மனைவி இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி யோசேப்பை மயக்க முயல்கிறாள். வீட்டில் யாரும் இல்லாத சூழ்நிலையை தனது மோகத்தைத் தணிப்பதற்காக பயன்படுத்த நினைக்கிறாள். யோசேப்பிடம் தன்னுடன் படுக்கத் தூண்டுகிறாள்.

யோசேப்பு அவளைத் தவிர்க்க விரும்புகிறார். வீட்டை விட்டு வேகமாக வெளியே செல்ல முயற்சிக்கிறார். அப்போது யோசேப்பின் மேலாடையை அவள் பற்றி இழுக்கிறாள். யோசேப்பு தனது மேலாடையை விட்டுவிட்டு வெளியே தப்பி ஓடுகிறார். போத்திபாரின் மனைவித் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக யோசேப்பு அவளிடம் தவறாக நடந்துகொள்ள முயற்சித்ததாக சத்தமிட்டு தன் வீட்டிலுள்ள ஆள்களைக் கூட்டுகிறாள். அவர்களிடம் யோசேப்பு தன்னுடன் படுப்பதற்காக அங்கு வந்ததாகவும், அவள் கூச்சலிட்டதால் தனது மேலாடையை விட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும் கூறுகிறாள். மேலும் அவளுடைய கணவன் வீட்டிற்குத் திரும்பிவந்தபோது யோசேப்பின் மீது அவள் குற்றஞ்சாட்டுகிறாள். நீர் நம்மிடம் அழைத்து வந்துள்ள எபிரேய அடிமை என்னோடு சரசம் பண்ணும்படி என்னிடம் வந்தான். அப்போது நான் கூச்சலிட்டுக் கத்தியதும், அவன் தன் மேலாடையை என்னருகே போட்டுவிட்டு வெளியே ஓடிப்போய்விட்டான் எனக் கூறுகிறாள். கூச்சலிடுவது குற்றம் நடக்காமலிருப்பதற்கு செய்யப்படும் ஒருயுக்தி. ஆனால் இங்கே தனது குற்றத்தை மறைப்பதற்காக அவள் பின்பற்றுகின்ற யுக்தியாக உள்ளது. யோசேப்பு தவறவிட்ட மேலாடையும், அவள் போட்ட கூச்சலும் யோசேப்பு குற்றவாளி என்பதற்கு ஆதாரங்களாக அவள் பயன்படுத்துகிறாள் (காண் இச 22:23-27).

யோசேப்பின் மேலாடை மீண்டும் ஒருமுறை யோசேப்பின் பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது. தனது தந்தையான யாக்கோபு அவர் மீது வைத்திருந்த அன்பால் அவருக்குக் கொடுத்த அங்கி அவருடைய சகோதரர்களின் வெறுப்பை அவருக்குச் சம்பாதித்தது. அதன் விளைவாகத்தான் அவர் இஸ்மயேலர்களிடம் விற்கப்பட்டு, எகிப்திற்கு வருகிறார். எகிப்தில் போத்திபாரால் விலைக்கு வாங்கப்பட்டு அடிமையாகிறார். யோசேப்பு இறந்ததாக அவரது தந்தையிடம் கூறுவதற்கு ஒரு அடையாளமாகவும்



அந்த அங்கி பயன்படுத்தப்படுகிறது. இப்போது யோசேப்பின் மேலாடை போத்திபாரின் மனைவியால் அவருக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது. இரண்டு இடங்களிலும் குற்றமற்ற யோசேப்பு துன்புறுத்தல்களுக்கு ஆளாகிறார். இதற்கு முந்தைய பிரிவில் தாமார் தனது மாமனாரான யூதாவிடமிருந்து அவரது முத்திரை மோதிரத்தையும், இடைவாரையும் கைக்கோலையும் கேட்டுவாங்குகிறாள். ஆனால் அவற்றை முக்கியமான ஒரு நோக்கத்திற்காகப் பயன்படுத்துகிறாள். யு+தா அவற்றைதான் கொடுக்கவேண்டிய ஆட்டுக்குட்டியைக் கொடுப்பதுவரை ஒருபணயமாகக் கொடுத்துவைக்கிறார். தாமார் அவற்றை, தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், தனக்குப் பிறக்க இருக்கின்ற குழந்தைகளுக்குத் தகப்பன் யாரென்று வெளிப்படுத்தவும் பயன்படுத்தகிறாள். போத்திபாரின் மனைவி, அதற்குமாறாக, வன்மத்துடன் செயல்படுகின்றாள். தனதுதவறை மறைப்பதற்காக குற்றமற்ற யோசேப்பின் மீது பழிசுமத்துகின்றாள்.

போத்திபார் யோசேப்பை சிறையில் அடைக்கிறான். இங்கே நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். போத்திபார் யோசேப்பிற்குக் கொலைத் தண்டனை விதித்து அவரைக் கொன்றிருக்கலாம். ஆனால் அவன் அதைச் செய்யவில்லை. மாறாக அவரைச் சிறையில் அடைக்கிறார். அதுவும் யோசேப்பை



அரசக் கைதிகள் காவலில் வைக்கப்பட்டிருந்த சிறைச் சாலையில் அடைத்துவைக்கிறார். அரசக் கைதிகள் என அழைக்கப்படுகிறவர்கள் அரசுக்கு எதிராகக் குற்றங்களைச் செய்தவர்கள். அவர்கள் ஏனைய கைதிகளைப் போலமிகவும் மோசமாக நடத்தப்படுவதில்லை. யோசேப்பு ஏன் அந்தச் சிறையில் அடைத்து வைக்கப்பட வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. ஒருவேளை போத்திபார் யோசேப்பு குற்றமற்றவர் என நினைத்தாரா? என எண்ணத் தோன்றுகிறது. உண்மை எதுவாக இருந்தாலும் யோசேப்பின் சிறைவாசம் தொடங்குகிறது. சிறையில் இருக்கும் போதும் அவர் ஆண்டவரால் ஆசிர்வதிக்கப்பட்டவராக இருக்கிறார். ஆண்டவர் யோசேப்புடன் இருந்து, அவர்மீது பேரன்புகாட்டி, சிறைமேலாளன் பார்வையில் அவருக்கு தயை கிடைக்கும்படி செய்தார் என வாசிக்கிறோம். போத்திபார் அவரை அடிமையாக வாங்கி அவருடைய வீட்டிற்கு அழைத்துவந்த போதும் இதுவே நடக்கிறது. ஆண்டவர் அவருடன் இருந்ததால் போத்திபாரின்





வீட்டில் அவர் தொட்டது அனைத்தும் துலங்குகிறது. போத்திபாரின் நம்பிக்கைக்குரியவனாக மாறுகிறார். போத்திபாரின் குடும்பத்தையும் நிலபுலன்களையும் நிர்வகிக்கும் பொறுப்பைப் பெற்று உயர்கிறார். சிறையிலும் இதுவே நடக்கிறது சில நாள்களிலேயெ சிறை மேலாளரின் நன்மதிப்பைப் பெறுகிறார். எனவே சிறைமேலாளர் சிறையிலிருந்த கைதிகள் அனைவரையும், அங்குச் செய்யப்பட்ட வேலைகள் அனைத்தையும், யோசேப்பின் பொறுப்பில் ஒப்படைக்கிறார்.

அவர் பொறுப்பில் விடப்பட்ட எதைப் பற்றியும் சிறை மேலாளன் விசாரிக்கவில்லை. ஏனெனில் ஆண்டவர் யோசேப்புடன் இருந்தார். அவர் செய்த யாவற்றிலும் வெற்றி அளித்தார் என ஆசிரியர் பதிவு செய்கிறார்.


போத்திபாரின் வீட்டில் யோசேப்பிற்கு நடக்கும் நிகழ்வுகள் ஒரு பெண் தனது விருப்பத்திற்கு உடன்பட மறுக்கும் ஒரு ஆண்மீது குற்றஞ் சாட்டுவதை மையமாகக் கொண்டுள்ளது. இத்தகைய கதைகள் பலநாட்டு இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. போத்திபாரின் மனைவியும் யோசேப்பும் கதைபோல எகிப்திய நாடோடிக்கதை ஒன்று உண்டு. அந்தக் கதை இரண்டு சகோதரர்களின் கதை என அழைக்கப்படுகிறது. இந்த இரண்டு கதைகளுக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. கதைகளின் முடிவுகள் மட்டுமே வித்தியாசமாக உள்ளன. இரண்டு கதைகளுக்கும் தொடர்புகள் இருக்க முடியும் என்பதை உறுதியாகக் கூறமுடியாது. இரண்டு கதைகளும் நாடோடிக் கதைகள் இலக்கிய வகையைச் சார்ந்தவை.

யேஸசேப்பின் வாழ்வில் நடப்பதாகக் கூறப்படும் இந்த நிகழ்வுகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினை ஒன்று உள்ளது. ஆண்டவரின் துணை ஒருவருக்கு இருக்கும்போது ஆயிரம் அல்லல்கள், தடைகள் வந்தாலும் அவரை ஒன்றும் செய்யமுடியாது. யோசேப்பின் சகோதரர்கள் அவர்மீது கொண்ட பொறாமையாலும், வெறுப்பாலும் அவரைக் கொலை செய்யத் திட்டமிடுகின்றனர். ஆண்டவர் அவரை அவர்களிடமிருந்து காப்பாற்றுகிறார். அதன்பின் அவரை மிதியானியர்களுக்கு அடிமையாக விற்கின்றனர். அடிமையாக வாழ்ந்து இறந்துவிடுவான் என அவர்கள் எண்ணியிருக்கலாம். ஆண்டவரின் அருட்கரம் அங்கேயும் அவருக்கு உதவிபுரிகிறது. ஆடிமையாக வாங்கியவனே அவரைத் தனது வீட்டிலுள்ள அனைத்திற்கும் அதிகாரியாக நியமிக்கிறார். தனது விருப்பத்திற்கு இணங்க மறுத்த யோசேப்பை போத்திபாரின் மனைவி அபாண்டமாகப் பழிசுமத்தி அவர் சிறையில் அடைக்கப்பட்ட போதும் ஆண்டவரின் அன்பு அவரை மேன்மைப் படுத்துகிறது. சிறைமேலாளர் அவர்மீது நம்பிக்கைவைத்து சிறைக் கைதிகளைக் கண்காணிப்பவராக, சிறையில் செய்யப்படும் அனைத்திற்கும் பொறுப்பாளராக நியமிக்கிறார். கடவுளின் அருட்பார்வை ஒருவருக்குக் கிடைக்கும்போது அவர் எல்லாச் சூழ்நிலைகளிலும் ஆசிர்வதிக்கப்பட்டவராகவே இருப்பார் என்பதற்கு யோசேப்பின் வாழ்க்கை ஆதாரமாக உள்ளது.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF





# மறையுரை

அருட்பணி. சூ.ஸ்டீபன் கஸ்பார்
பங்குதந்தை
திருமுழுக்கு யோவான் ஆலயம்
காமலாபுரம், திண்டுக்கல் மறைமாவட்டம்

பொதுக்காலம்
15-ம் ஞாயிறு

10-07-2022

**இணைச்சட்டம் 30:10-14 கொலோசையர் 1:15-20 லூக்கா 10:25-37**

## அடுத்திருப்பவர் யார் என அறிவதே நிலை வாழ்வு

இறை இயேசுவில் எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே. நாம் வாழும் இந்த உலகமோ அடுத்தவரைப் பற்றி அக்கறையோ, கரிசனையோ படாத உலக். இப்படிப்பட்ட உலகிலே வாழும் நாம் எப்படிப்பட்டவர்கள் என ஆய்ந்து அறியவும், அடுத்தவர்மீது அன்னை மரியா, அன்னைத் தெரேசா போல அக்கறை கொண்டு வாழ அழைக்கும் ஆண்டின் பொதுக்காலம் 15ம் ஞாயிறு நற்செய்தியை இன்று கேட்டு உள்வாங்கினோம். சிந்திக்க, வாழவை சீர்தூக்கிப் பார்க்க இறைவனின் குரலுக்கு இன்று செவி சாய்க்க முன் வருவோம். அவரில் ஒன்றாய் இணைவோம்.

அன்புக்குரிய இறைமக்களே, யூதர்களைப் பொறுத்தமட்டில், தன் அயலான், தனக்கு அடுத்திருப்பவன், மற்றொரு யூதன்தான் என்பதை குழந்தைகளாக இருக்கும்பொழுதே அவர்களுக்கு சொல்லிக் கொடுப்பது யூத மரபு. யூதரன்றி வேறு எவரையும் அன்பு செய்யக் கூடாது. வேறு எவர்மீதும் இரக்கம் காட்டக் கூடாது. அடிமனதில் யூதர்களிடையே புகுத்தப்பட்ட இந்தப் பழைய பாடத்திற்கு இன்றைய நற்செய்தி வழியாக புதிய பாடத்தை இயேசு புகட்டுகிறார்.

இந்த நல்ல நல்ல சமாரியன் வழியாகக் கற்றுத் தருகிறார். எவனொருவன் ஆண்டவனின் விருப்பத்தை நிறைவேற்றுகிறானோ, ஆண்டவரின் வார்த்தைக்கு உருக் கொடுக்கிறானோ அவனே அயலான் என்று விளக்கம் தருகிறார். இங்கு.

நல்ல சமாரியன் உவதை வழியாக ஆண்டவர் இயேசு பிறரன்பு என்றால் என்வென்பதை சுட்டிக் காட்டி நமது இதயத்தில் நம் திருமுழுக்கு நாளிலே ஆண்டவரின் ஆவியால் எழுதப்பட்ட அன்புக் கட்டளையை முதல் வாசகம் மூலம் வாழ்வாக்க நமக்கு அழைப்பு தருகிறார்.

உண்மையான அன்பை ஒரு நாணயத்திற்கு ஒப்பிடலாம். அதற்கு இரு பக்கம் உள்ளது. ஒரு பக்கம் தன்னை மறத்தல், மற்றொரு பக்கம் மற்றவரை நினைப்பது. அந்த சமாரியன் தன்னை மறந்தார். தன் வியாபாரத்தை மறந்தார். தன் சுகத்தை மறந்தார். அனைத்தையும் மறந்து அடிபட்டுக்கிடந்தவரின் பரிதாப நிலையை நினைத்தார். அவருடைய தேவையை மட்டுமே நினைத்து அவரின் உயிரை நினைத்து அவருக்கு உதவி செய்தார்.

ஆம், அன்பானவர்களை, பிறரை அனபு செய்யவிடாது நம்மைத் தடுப்பது நம் சுயநலமாகும். சுயநலம் களையப்பட்டால்தான் நாம் பிறரைப் பற்றிய கரிசனை, கவலை கொள்ள முடியும்.

இவ்வாறு சுயநலமற்றவர்களாய், பிறர் நலம் கொண்டு, அயலாரில் ஆண்டவரைக் காணவும் அவருக்கு பணிவிடை செய்யவும், அன்னை தெரேசா, புனித. டேனியன், மேக்ஸிமிலியன் கோல்பேக்களாகவும் வாழ அழைப்பு தருவதே இன்றை நல்ல சமாரரியன் உவமை என்றால் அது மிகையில்லை.

இந்த சுயநல வலையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள தூய.பவுல் இன்றைய இரண்டாம் வாசத்தின் மூலம் வழி சொல்லித் தருகிறார். நம் உடலின் (திருஅவையன்) தலையாய் உள்ளவர் இயேசு. அவர் நம் தலையென்றால், அவர் சொல்வதுபோல நடப்பதே முறை என்கிறார். நம் ஆண்டவர் இயேசுவும் யோவான் 14/23ல் என்மீது அன்பு கொண்டிருப்பவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார் என்கிறார்.

குற்றுயிராய்க் கிடந்த எரிக்கோவிலிருந்து எருசலேம் வழியிலே, வந்தவர் அந்த மனிதன் தேவையிலிருக்கிறான். அவ்வழியே சென்ற குரு, லேவியர், இருவரும் கண்டும் காணாமல் போய்விட, அவ்வழியாய் வியாபார நிமித்தமாய் தன் கழுதையில்

பயணம் செய்த வியாபாரி இரக்கம் காட்டுவதை, தொட்டுத் தூக்குவதை, கட்டுப் போட்டு, கழுதைமேல் ஏற்றி சத்திரக்காரனிடம் கண்காணிக்கக் காசு கொடுத்து, திரும்பி வருகையில் பணம் கொடுத்து அழைத்துச் செல்கிறேன் எனப் பரிவு காட்டுயவன் ஓர் சமாரியன்.

இயேசு இந்தச் சமாரியனின் உவமையில் புகுத்தி, மக்களின் மனதிலிருந்த வேற்றுமை உணர்வுகளை களைந்தெரிய முன்வருகிறார். இங்கே யூத சமுதாயத்திலே புறந்தள்ளப்பட்ட (கலப்பின யூதர்) அந்த சமாரியனின் இரக்கத்தை அன்புச் செயலை, பரிவை, பாசத்தை படம்பிடித்து பார்க்க வைக்கிறார் நம் ஆண்டவர் இயேசு.

அன்பான இறைச் சமூகமே. நிறை வாழ்வு என்பது ஆண்டவரை, அயலானை, தேவையிலுள்ள அடுத்தவரை அன்பு செய்வதேயாகும். நிலை வாழ்வு என்பது வெறும் கட்டளையை கடைப்பிடிப்பது மட்டுமல்ல. இரக்கம் என்பது கணக்குப் பார்க்கும் இதயமல்ல . இரக்கம் பரிவு என்பது தேவைகளை மட்டும் தேடிப்பார்ப்பதாகும். ஆம் நம் வாழ்விலே அந்த குரு, லேவி போல மறுபக்கம் மாறிச் செல்லாது, தேவையில் முன் சென்று இரக்கச் செயல் செய்து உயிரைக் காத்த சமாரியனாக நாம் எப்போது மாறப்போகிறோம்?

குருவும், லேவியும் ஆண்டவரை (அயலாரை) வாயிலும், இதயத்திலும் தாங்கினார்கள். கரத்தால் தாங்கிட முன் வரவில்லை. ஆனால் நல்ல சமாரியன் கரம் நீட்டி உதவி, வாயிலும், இதயத்திலும் தாங்க அந்தத் தேவையிலிருந்த யூதனின் துயரைப் போக்கியதுபோல, நாமும் நடக்க, அடுத்தவரை அன்பு செய்ய, நமது இதயம், வாய், கைகளை ஆண்டவர் கட்டாயம் பயன்படுத்திட அருள் வேண்டுவோம். நம் செபத்தால் இறையன்பில் இணைந்து பிறரன்பை வெளிப்படுத்துவோம். செபிப்போம்.

உன் அருகில் நான் என என்றிடம் சொல்லும் ஆண்டவரே, தேவையிலிருப்போரைத் தேடிச் செல்ல அழைப்பவரே, உனக்கு அருகிலே நான் எனச் சொல்லி, நிலைவாழ்வுக்கான வாயில் தொடங்கும் என் பயணம் கைகளில் முடிய என்னைத் தொடும். தொடரட்டும் என் பிறரன்புப் பணி, நிலைவாழ்வுப் பயணம்.

– ஆமென்





# குறள் வழங்கும் சமூக நெறி பாயிரவியல்

## 1. கடவுள் வாழ்த்து

சிந்தனையாளர்
அருட்சகோதரி. ஜெஸிந்தா ஜான்சன் FSPM

**குறள் : 1**
**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு**

**குறள் விளக்கம்**
எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

**சிந்தனை**
கடவுள் நம்பிக்கை உடையவர் ஆத்திகர். கடவுள் நம்பிக்கை அற்றவர் நாத்திகர்.

இந்த இரு குழுவினருக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பவரை எப்படி அழைப்பது?

சிலர் கடவுள் நம்பிக்கை அற்றவர் என சொல்லிக் கொண்டாலும் வேதங்கள் சொல்லும் நற்செயல்கள் அனைத்தையும் வாழ்வில் கடைபிடிக்கின்றனர். ஆனால் கடவுள் நம்பிக்கை உடையவர்கள் பலர் சமய கொள்கைகளுக்கு மாறான வாழ்க்கை நடத்துகின்றனர். இதிலும் உச்சமாக 'நானே கடவுள்' என்ற நிலைக்கு தன்னை உயர்த்துவோரும் உண்டு.

குறள் ஒன்றில் திருவள்ளுவர் இந்த உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கிறது என்கிறார். இக்கருத்து இந்த பூமியில் கடவுள் நம்பிக்கை உடையோர் பெரும்பான்மையாக இருப்பதால் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

நம் நம்பிக்கைக்கு ஏற்றவாறு நம் நடத்தை அமையாவிடில் நமது நடத்தைக்கு ஏற்றவாறு நம் நம்பிக்கை மாறிவிடும். – பேராயர் ஃபுல்டன் ஜான் ஷீன்.

ஆயரின் கூற்றுப்படி கடவுள் நம்பிக்கை கொண்டவர் கடவுளின் வார்த்தைபடி வாழாமல் தனது விருப்பப்படி வாழ்வாரெனில் அவர் கடவுளை அடிப்படையாக கொண்டவரல்லர். அவர் தன்னை முன்னிலைப்படுத்தி வாழ்பவராகிறார். கடவுளை அடிப்படையாக கொண்டவர் எச்சூழலிலும் கடவுளை முன்னிலைப் படுத்துவார்.

சமீபத்தில் The Chariots of Fire என்ற திரைப்படத்தை குறித்து கேள்விப்பட்டேன். பாரிஸ் ஒலிம்பிக்கில் தங்க பதக்கம் வாங்கிய 'எரிக் லிட்டல'; என்ற விளையாட்டு வீரரைப் பற்றியது தான் அந்த திரைப்படம். அவர் எந்த அளவுக்கு கடவுளை தன் வாழ்வில் அடிப்படையாக கொண்டு வாழ்ந்தார் என்பதை தான் அப்படத்தின் இயக்குநர் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் ஓர் ஓட்டப்பந்தய வீரர். ரசிகர்களுக்காக அல்ல நாட்டுக்காக அல்ல, புகழுக்காக அல்ல, சொந்த மகிமைக்காகவும் அல்ல கடவுளுக்காக ஓடினார். ஏனெனில் கடவுளை அவர் அடிப்படையாக கொண்டிருந்தார்.

1924ம் ஆண்டில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் 100மீ ஓட்டப்பந்தயத்தில் இவர் ஓடுவதாக இருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக அந்த நாள் ஞாயிற்றுக்கிழமையாக இருந்தது. கிறிஸ்தவ மிஷனரியான வீரர் எரிக் லிட்டலுக்கு இது பெரும் சோதனையாக அமைந்தது. ஓய்வு நாளில் கடவுளை மகிமை படுத்துவதா? அல்லது போட்டியில் கலந்து கொள்வதா? என குழம்பினார். பின்னர் 100மீ பந்தயத்திலிருந்து விலகினார். இதனை கேள்விபட்டவர்கள் அவரை 100மீ போட்டியில் கலந்து கொள்ள வைக்க வெகுவாக முயன்றனர். நம் வீரரோ தனது முடிவில் தெளிவாக இருந்தார்.

கடவுள் தான் முக்கியம், அவரே என் அடிப்படை என உறுதியாக இறுதி வரை நின்றார். பின் வேறொரு நாளில் நடைபெற இருந்த 400மீ போட்டியில் கலந்து கொள்வதாக அறிவித்தார். 100மீ ஓட பயிற்சி பெற்ற இவர் 400மீ ஓட்டத்தில் வெல்வாரா? என்ற ஐயம் கொண்டிருந்தவர்கள் முன் இறை ஆசீரோடு ஓடி வெற்றி கனி பறித்தார்.

எனவே இறைவனை அடிப்படையாக கொள்வோம்: அடி சறுக்காமல் வாழ்வோம்.



# பொதுக்காலத்தின் 15-ம் ஞாயிறு

இச. : 30:10-14, கொலோ. 1:15-20, லூக். 10:25-37

**10-07-2022**



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

கடவுளாகிய ஆண்டவரின் குரலுக்கு செவி சாய்த்து, அவர்தம் கட்டளைகளையும், நியமங்களையும் கடைப்பிடித்து அடுத்திருப்போரை அன்பு செய்து வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 15-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

திருடர்களிடமிருந்த சுரண்டல் மனநிலை, குருவிடமிருந்த கண்டும் காணா மனநிலை. லேவியரிடமிருந்த பொறுப்பற்ற மனநிலை ஆகியவற்றை விட்டுவிட்டு நல்ல சமாரியனிடமிருந்த தியாக மனநிலையை பெற்று வாழ நாம் அழைக்கப்படுகிறோம்.

நமக்கு அடுத்திருப்போரை முழு இதயத்தோடும் முழு ஆற்றலோடும் அன்பு செய்து வாழ வேண்டும் என்பதே இன்றைய வழிபாட்டின் மையக் கருத்தாக உள்ளது.

மனித வாழ்வில் இறையன்பும், பிறரன்பும் இரு கண்களாகக் கருதப்படுகிறது. அத்தகைய இரட்டை அன்பைப் பற்றியும் வாழ்க்கை என்பது சட்டத்திலும் சம்பிரதாயத்திலும் இல்லை. மாறாக அது வாழுகின்ற முறையிலே இருக்கின்றது என்பது பற்றியும் இன்றைய வாசகங்கள் எடுத்துக் கூறுகின்றன.

நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ளவும், நல்ல சமாரியர்களாக வாழவும், சக மனிதர்களின் தேவைகளை உணர்வதும், உணர்ந்து அவர்களது துன்பத்தைப் போக்குவதும் நம் ஒவ்வொருவரின் கடமை என்பதை இன்றைய வழிபாடு நமக்கு உணர்த்துகிறது.

நாம் நமக்கு அடுத்து இருப்பவர் மீது அன்பும் அக்கறையும், தேவையில் உள்ளவர்களுக்கு இரங்கும் மனமும் கொண்டு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

## முதல் வாசக முன்னுரை

பாபிலோனிலிருந்து திரும்பி வந்த மக்களிடம் மோசே ஆற்றும் திருவுரையே இன்றைய முதல் வாசகமாக அருளப்பட்டுள்ளது. கடவுள் நமக்குக் கொடுத்துள்ள கட்டளைகள் நமக்கு எட்டாத தொலைவில் இல்லை. அவை நமது உள்ளத்தில், நமது சிந்தையில் உள்ளது மனசாட்சிபடி வாழ்ந்து கடவுளிடம் திரும்பி வாருங்கள் என அழைக்கும் இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்துவின் முதன்மைத் தன்மையையும், சுயநலத்திலிருந்து விடுதலை அடைய ஓர் அழகான வழியையும் இன்றைய இரண்டாம் வாசகத்தின் வழியே புனித பவுலடியார் விளக்குகிறார். கிறிஸ்துவை விண்ணுக்கும் மண்ணுக்கும் வேந்தனாக, தனக்கு உவமை இல்லாத தனி மனிதனாக இயேசுவின் மாண்பு பற்றி காவியம் பாடும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

1) திருஅவை என்ற உடலுக்கு தலையும் தொடக்கமுமான அன்பு இறைவா உம் திருஅவையை வழி நடத்தும். எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் உள்ளத்தில் நிறை அன்பும், இதயத்தில் இரக்கமும் உள்ளவர்களாய் வாழ வரமருளும். அவர்கள் தங்கள் பணி வாழ்வில் வரும் துன்பத்தில் உம்மை மகிமைப்படுத்தவும், அத்துன்பத்தைத் தாங்கிக்கொள்ளவும் தூய ஆவியின் வல்லமையை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) அனைத்துக்கும் முக்கியவரான அன்பு இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் நல்ல சமாரியனைப் போன்று எங்களோடு வாழும் சக மனிதர்களை அன்பு செய்யவும், அவர்களது தேவைகளை அறிந்து உணர்ந்து நிறைவேற்றவும், அதன் வழியாக நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ளவும், வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) அனைத்தையும் படைத்து பாதுகாத்து வரும் அன்பு இறைவா, எங்கள் தாய்த்திருநாட்டில் மதச் சிறுபான்மையினருக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தும், பாதுகாப்பின்மையும் முற்றாக ஒழியவும், எம் மண்ணில் மதநல்லிணக்கம் மலர்ந்து மணம் வீசவும், சமத்துவ எண்ணமும் சரிநிகர் மனப்பான்மையும் மேலோங்கி எமது நாடு அமைதிப் பூங்காவாகத் திகழவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) உலகில் உள்ள அனைத்தையும் கிறிஸ்து வழியாக தம்மோடு ஒப்புரவாக்கிய அன்பு இறைவா, முதுமை, பலவீனம், நோய்கள், இல்லாமை, இயலாமை, வறுமை, பசி, கடன் தொல்லை போன்ற கவலைகளால் பாதிக்கப்பட்டு ஆறுதல் தேடி அலையும் உள்ளங்களுக்கு நீரே ஆறுதல் தரும் மருத்துவராக, ஆலோசகராக, நல்ல சமாரியனாக இருந்து அனைத்திலிருந்தும் அவர்களை மீட்டு ஆறுதலும், அமைதியும், நிம்மதியும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## திரு.வி.க.வின் கிறிஸ்துவின் அருள் வேட்டல்



பராபரக் கடவுள் வாழி! பரிசுத்த ஆவி வாழி!
நிராமயக் குமரன் வாழி! நிறையருள் அடியார் வாழி!
புராதன மொழிகள் வாழி! புண்ணியச் சிலுவை வாழி!
விராவிய குருதி வாழி! வியன்சபை வாழி! வாழி!

விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் தலைவராகிய இறைவன் வாழ்க. தூய ஆவியானவராகிய இறைவன் வாழ்க. நிலையான தன்மையையுடைய இறைமைந்தன் வாழ்க. அளவில்லாத இறைவனின் அருளைப் பெற்ற இறையன்பர்கள் வாழ்க. பழமையான மொழிகள் வாழ்க. மக்கள் மீட்புப் பெற நன்மை செய்த இயேசு பெருமான் ஏற்ற சிலுவை வாழ்க. மக்களில் கலந்து குற்றங்களை நீக்கிய இயேசுவின் இரத்தம் வாழ்க. உலகமெங்கும் பரந்துள்ள திருச்சபை என்றும் வாழ்க.

பரம் + அபரம் = பராபரம். பரம் - விண்ணுலகம், அபரம் - மண்ணுலகம், விராவிய - கலந்த
நிராமயம் - நிலையான தன்மை, புராதனம் - பழமை, புண்ணியம் - நன்மை, வியன் - பரந்த

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## பொதுக்காலத்தின் 15-ம் ஞாயிறு

### 10.07.2022 – ஞாயிற்றுக்கிழமை

முதல் வாசகம் : இச. 30 : 10-14
இரண்டாம் வாசகம் : கொலோ. 1 :15-20
நற்செய்தி வாசகம் : லூக். 10 : 25-37

### 11.07.2022 – திங்கள்கிழமை

முதல் வாசகம் : எசா. 1 : 11-17
நற்செய்தி வாசகம் : மத். 10 : 34-11 : 1

### 12.07.2022 – செவ்வாய்கிழமை

முதல் வாசகம் : எசா. 7 : 1-9
நற்செய்தி வாசகம் : மத். 11 : 20 - 24

### 13.07.2022 – புதன்கிழமை

முதல் வாசகம் : எசா. 10 : 5-7, 13-16
நற்செய்தி வாசகம் : மத். 11 : 25-27

### 14.07.2022 – வியாழக்கிழமை

முதல் வாசகம் : எசா. 26 : 7-9, 12, 16-19
நற்செய்தி வாசகம் : மத். 11 : 28-30

### 15.07.2022 – வெள்ளிக்கிழமை

முதல் வாசகம் : எசா. 38 : 1-6, 21-22, 7-8
நற்செய்தி வாசகம் : மத். 12 : 1-8

### 16.07.2022 – சனிக்கிழமை

முதல் வாசகம் : மீக். 2 : 1-5
நற்செய்தி வாசகம் : மத். 12 : 14-21

Like the Good Samaritan, may we not be ashamed of touching the wounds of those who suffer, but try to heal them with concrete acts of love

-Pope Francis-



# வத்திக்கான் செய்திகள்

### திருப்பீட சீர்திருத்தங்கள் வருங்கால ஊழல்களைத் தவிர்க்க உதவும்

ராக்ஷீட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் அமெரிக்க பத்திரிக்கையாளர் பிலிப் பியூலா அவர்கள் இவ்வாண்டு ஜுன் மாதத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வத்திகானில் சந்தித்து பல்வேறு தலைப்புகளில் முன்வைத்த கேள்விகளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வத்திகானில் நிதியைக் கையாள்வது குறித்த விசயங்களில் தற்போது இடம்பெற்றுள்ள சீர்திருத்தங்கள், வருங்கால நிதி சார்ந்த ஊழல்களை தவிர்க்க உதவும் என்று தான் நம்புவதாக கூறியுள்ளார்.

### மக்களும் இயற்கையும் மதிக்கப்படுவதற்கு புதிய வழிகளைத் தேடுங்கள்

வட இத்தாலியில் ஆல்ப்ஸ் மலையின மார்மோலடாவில் ஏற்பட்ட பனிச்சரிவால் குறைந்தது ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 19 பேர் காணாமல் போயுள்ளனர். இதனால் கடந்த ஜுலை 4 இத்திங்களன்று இத்தாலியில் நடைபெற்ற இயற்கைப் பேரிடரையொட்டி வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார். மேலும் காலநிலை மாற்றத்தால் நாம் எதிர்கொள்ளும் பெருந்துயர்கள், மக்கள், இயற்கையும் மதிக்கப்படுவதற்கு புதிய வழிகளை உடனடியாகத் தேடுமாறு வலியுறுத்துகின்றன என்று கூறியுள்ளார்.

### அனைத்துவிதமான வன்முறைகளும் புறக்கணிக்கப்பட வேண்டும்

ஜுலை 4 இத்திங்களன்று நடைபெற்ற அணிவகுப்பில் ஒருவர் நடத்திய துப்பாக்கிச்சூடு தாக்குதலில் ஆறுபேர் இறந்துள்ளனர், மற்றும் முப்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இது குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பாறையான இதயங்களைக்கூட மனமாற்றம் அடையச்செய்யவும், தீமையிலிருந்து விலகி, நன்மை செய்வதை நடைபெறக்கூடியதாக மாற்றும் கடவுளின் அருளில் முழு நம்பிக்கை வைப்போம் என்று கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், சமுதாயத்தின் ஒவ்வொரு நபரும் வன்முறையின் அனைத்து வடிவங்களையும் புறக்கணிக்கவும், வாழ்வின் அனைத்து நிலைகளையும் மதிக்கவும் வேண்டும் என்று இறைவேண்டல் செய்கிறேன் என்றும் கூறியுள்ளார்.

### மனிதர்களிடையே உடன்பிறந்த உணர்வை வளர்க்கும் விளையாட்டு

ஜுலை 4 இத்திங்களன்று திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் பின்வருமாறு கூறியுள்ளார். கிழக்கு ஐரோப்பாவிலும் உலகின் பல பகுதிகளிலும் மோதல்கள் இடம்பெற்றுவரும் இவ்வேளையில் மனிதர்களிடையே உடன்பிறந்த உணர்வு நிலையையும், நட்புணர்வையும் உரமூட்டி வளர்ப்பதற்கு விளையாட்டுப்போட்டிகள் பெருமளவில் பாங்காற்ற முடியும் என எடுத்துறைத்துள்ளார்.

மேலும் அவர் பல்வேறு நாடுகளிலிருந்து விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளவரும் இளையோர் ஒருவரை ஒருவர் நேரடியாகச் சந்தித்து கருத்துப்பரிமாற்றங்களில் கலந்து கொள்வது, மனித குலத்தின் வருங்காலத்திற்கு பெரு நம்பிக்கையைத் தரும் அடையாளமாக இருக்கும் எனவும் கூறியுள்ளார்.




# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

## தித்திக்கும் திருக்குறள்

**பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து அறம்பொருள் கண்டார்கண்இல.**

அதிகாரம் 15

பிறனில் விழையாமை

குறள் – 141

**பொருள் :** பிறனுடைய உரிமையான மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை என்பது உலகத்தில் அறமும் பொருளும் ஆராய்ந்து கண்டவரிடம் இல்லை என்கிறார் வள்ளுவர். ஒரு மனிதன் மற்றொருவனுடைய மனைவியோடு படுத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டால், அப்பெண்ணும் அப்பெண்ணோடு படுத்தவனும், இருவரும் சாவர். இவ்வாறு இஸ்ரயேலிலிருந்து தீமையை அகற்று. (இணைச் சட்டம் 22:22)

பத்து கட்டளைகளில் ஒன்பதாவது கட்டளை பிறர் மனைவிமீது ஆசை கொள்ளாதே என்பதாகும்.

பிறன் மனைவியைக் காமுறாதே. பிறர் வீடு, நிலம் அடிமை அடிமைப்பெண் மாடு கழுதை அல்லது பிறருக்கு உரியது எதையும் கவர்ந்திட விரும்பாதே. (இணைச்சட்டம் 5:21) என்ற இவ்வார்த்தைகளை ஆண்டவர் மலைமேல் நெருப்பு மேகம் காரிருள் நடுவிலிருந்து உரத்த குரலில் சபையோர் எல்லோரிடமும் பேசினார்.

திருவிவிலியத்தில் தொடக்க நூலின் படி யாக்கோபின் 12 மகன்களில் யோசேப்பு பதினொன்றாம் மகன். (தொடக்கநூல் 37 :1-3) இவர் இராகேலின் முதல் மகன். தந்தை யாக்கோபுக்கு வயது முதிர்ந்த காலத்தில் இவர் பிறந்ததால் தம் மற்ற எல்லா புதல்வர்களிலும் இவரை அதிகம் அன்பு செய்ததார்.

மேலும் யோசேப்பு தவறுகளைச் சுட்டிக் காட்டும் பண்பினை உடையவராகவும் நேர்மையுள்ளவராகவும் இருந்தார். அவர் தன் சகோதரர் செய்துவந்த தீச்செயலை பற்றி தன் தந்தைக்கு தகவல் கொடுத்தார். இஸ்ரயேல் தம் முதிர்ந்த வயதில் தமக்கு யோசேப்பு பிறந்தமையால் அவரை மற்ற எல்லா புதல்வர்களையும் விட அதிகமாக நேசித்து வந்தார். அவருக்கு அழகு வேலைப்பாடுகள் நிறைந்த ஒரு அங்கியை செய்து கொடுத்தார். அவருடைய சகோதரர்கள் தங்கள் தந்தை அவரை எல்லாரிலும் அதிகமாக நேசிக்கிறார் என்று கண்டு அவரை வெறுத்தனர். அவர்களால் அவரோடு பாசத்துடன் பேச இயலவில்லை. (தொ. நூல். 37 :2-4)

யோசேப்பை இஸ்ரேல் எனப்படும் யாக்கோபு மட்டும் அதிகமாக நேசிக்கவில்லை. ஆண்டவர் தான் மிக அதிகமாக நேசித்தார் என்றே சொல்லவேண்டும். 17 வயது நிரம்பிய இளைஞன் யோசேப்பின் கனவில் வழியாக வருங்காலத்தில் மற்ற எல்லா சகோதரர்களை விடவும் உயர்ந்த நிலையில் இருப்பார் என்பதை கனவின் வழியாக கடவுள் அவருக்கு வெளிப்படுத்தினார். ஆனால் தன் சகோதரர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இன்னும் அதிகமாக வெறுத்தனர்.

யோசேப்பு தாம் கண்ட ஒரு கனவைத் தம் சகோதரருக்குத் தெரிவித்தார். இதனால் அவர்கள் அவரை மேலும் அதிகமாய் வெறுத்தனர். அவர் அவர்களை நோக்கி நான் கண்ட இந்தக் கனவைக் கேளுங்கள். நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டும் பொழுது திடீரென எனது அரிக்கட்டு எழுந்து நிற்க உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கின என்றார். அப்பொழுது அவர் சகோதரர் அவரை நோக்கி நீ எங்கள் மீது உண்மையிலேயே ஆட்சி செலுத்தப்போகிறாயோ? நீ எங்கள் மீது உண்மையிலேயே அதிகாரம் செலுத்தப் போகிறாயோ? என்று கேட்டனர். இவ்விதக் கனவுகளின் காரணமாகவும் அவருடைய தகவல்களின் காரணமாகவும் அவரை அவர்கள் இன்னும் அதிகமாய் வெறுத்தனர்.

மேலும் அவர் தாம் கண்ட வேறொரு கனவையும் தம் சகோதரர்களுக்கு விவரித்தார். நான் மீண்டும் ஒரு கனவு கண்டேன்; அதில் கதிரவனும் நிலவும் பதினொரு விண்மீன்களும் என்னை வணங்கக் கண்டேன் என்றார்.

இதை அவர் தம் தந்தைக்கும் சகோதரர்களுக்கும் விவரித்தபோது அவர் தந்தை அவரைக் கண்டித்து நீ கண்ட இந்தக் கனவின் பொருள் என்ன? நானும் உன் தாயும் உன் சகோதரர்களும் தரைமட்டும் தாழ்ந்து உன்னை வணங்க வேண்டுமா? என்று கேட்டார்.

அதன் பொருட்டும் அவர் சகோதரர் அவர் மீது பொறாமை கொண்டனர். அவர் தந்தையோ இக்காரியத்தைத் தம் மனத்தில் கொண்டார். (தொடக்கநூல் 37:5-11)

யோசேப்பு கடவுள் தமக்கு வெளிப்படுத்திய கனவினைப் பற்றி தம் சகோதரர்களிடமும் தந்தையிடமும் எதையும் கூட்டவோ குறைக்கவோ செய்யாமல் உள்ளது உள்ளபடி அப்படியே எடுத்துக் கூறுகின்றார். ஏனென்றால் பொறாமை கர்வம் மற்றும் எத்தீமைகளும் யோசேப்பிடம் இல்லாததால் அனைவரிடமும் அன்பாகவும் உண்மையாகவும் இருந்தார். அதனால் தான் தம் தந்தைக்கு கீழ்படிந்து பல கிலோமீட்டர்கள் தள்ளி ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த அண்ணன்மார்களுக்கு உணவைச் சுமந்து சென்றார். ஆனால் அவர்களோ இரக்கமில்லாமல் எகிப்தியருக்கு அடிமையாக அவரை விற்றுப்போட்டனர் என்பதை தொடக்கநூலில் 37 ஆம் அதிகாரம் 18 முதல் 28ஆம் வசனங்கள் வரை வாசிக்கிறோம்.

ஆனால் அவர் சென்ற இடங்களில் எல்லாம் அவர் செய்த வேலைகளில் எல்லாம் கடவுள் அவரோடு கூட இருந்து பன்மடங்கு ஆசீர்வதித்தார். யோசேப்பு எகிப்து நாட்டிற்கு கொண்டு போகப்பட்டபோது பார்வோனின் மெய்க்காப்பாளர் தலைவனும் படைத்தலைவனுமான போத்திபார் என்ற எகிப்தியன் அவரைஅவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மயேலரிடமிருந்து விலைக்கு வாங்கினான்.

ஆண்டவர் யோசேப்புடன் இருந்தார். எனவே அவர் சிறப்புற்றவராகத் தம் எகிப்தியத் தலைவனின் இல்லத்தில் வாழ்ந்து வந்தார். ஆண்டவர் அவரோடு இருந்ததையும் அவர் தொட்ட காரியமனைத்தையும் ஆண்டவர் துலங்கச் செய்ததையும் அவர் தலைவன் கண்டான்.

எனவே அவனுடைய தயை யோசேப்புக்குக் கிடைத்தது. அவன் அவரைத் தன் சிறப்புப் பணியாளராகவும் வீட்டின் மேலாளராகவும் நியமித்து தனக்கிருந்த அனைத்தையும் அவர் பொறுப்பில் ஒப்படைத்தான்.

இவ்வாறு தன் வீட்டையும் தனக்கிருந்த அனைத்தையும் அவர் பொறுப்பில் விட்டதிலிருந்து எகிப்தியனின் வீட்டுக்கு யோசேப்பின் பொருட்டு ஆண்டவர் ஆசி வழங்கினார். வீட்டிலும் வயல்வெளியிலும் அவனுக்கிருந்த அனைத்தின்மீதும் ஆண்டவர் ஆசி பொழிந்தார்.

இவ்வாறு யோசேப்பின் பொறுப்பில் தனக்கிருந்த அனைத்தையும் ஒப்படைத்த பின்இ தான் உண்ணும் உணவைத் தவிர வேறெதைப் பற்றியும் அவன் விசாரிக்கவில்லை. யோசேப்பு நல்ல உடற்கட்டும் அழகிய தோற்றமும் கொண்டிருந்தார். (தொடக்கநூல் 39:1-6)

பல இன்னல்களையும் போராட்டங்களிலும் தெய்வபயத்தில் உண்மையிலும் உண்மையாக இருந்த யோசேப்பிற்கு தன் எஜமானன் மனைவியால் பெரும் சோதனை ஏற்பட்டது. எகிப்தியர்களை விட யோசேப்பு மிக அழகானவர்; சுறுசுறுப்பானவர்; நேர்மையானவர்; உண்மையுள்ளவர் தான் செய்கின்ற வேலைகளில் கவனமும் உண்மையும் உடையவர். இதனால் அனைவரின் கண்களும் அவர் மேல் இருந்தன. மேலும் அனைவரின் நன்மதிப்பும் பெற்றிருந்தார். இதை அனைத்தையும் கவனித்துக் கொண்டே இருந்த போர்த்திபரின் மனைவி யோசேப்பின் மீது காமுற்றாள். அனுதினமும் அவருக்கு தொல்லை கொடுத்து வந்தாள்.

ஆனால் யோசேப்போ பிறன் மனைவியை விரும்புவது மாபெரும் தவறு என்று அறிந்தவர். இஸ்ரயேல் குடும்பத்தை சார்ந்த அவர் அன்னிய தெய்வங்களைப் பின்பற்றும் இனத்தார் மீது தம் கரங்கள் பட்டால் கூட அது நடுங்கவைக்கும் தீட்டு ஆண்டவருக்கு அருவெறுப்பு என்பதை அறிந்திருந்தார். எனவே பாம்பைக் கண்டு விலகுவது போல பாவத்தைக் கண்டு அந்தப் போர்திபரின் மனைவியைக் கண்டு ஓடிப்போனார்.

பாம்பைக் கண்டு ஓடுவதைப்போலப் பாவத்தைவிட்டு ஓடிவிடு; நீ பாவத்தின் அருகில் சென்றால் அது உன்னைக் கடிக்கும்; அதன் பற்கள் சிங்கத்தின் பற்கள் போன்றவை; அவை மனிதரின் உயிரைப் போக்கி விடும். (சீராக்கின் ஞானம் 21:2)

தனது மேலங்கியை தொட்ட அந்தப் போர்திபரின் மனைவியிடம் சிக்காமல் பாம்பைக் கண்டு விலகி ஓடுவது போல மேலங்கியும் விட்டுவிட்டு ஓடிவிட்டார். அதனால் அவர் அடைந்த இன்னல்களும் அவபெயர்களும் ஏராளம். அப்படியிருந்தும் அவர் கற்பில் சிறந்தவராக கடவுளுக்கு உகந்தவராக வாழ்ந்ததால் அவர் சிறையிருப்பை கடவுள் மாற்றி அந்த எகிப்து தேசத்திற்கு முழுவதும் அதிபராக கடவுள் உயர்த்தினார்.

பிறனுடைய உரிமையாகிய மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை உலகத்தில் அறமும் பொருளும் ஆராய்ந்து கண்ட இடம் இல்லை என்பதை யோசேப்பின் வழிநின்று திருவள்ளுவர் பிறனில் விழையாமை என்ற அதிகாரத்தை எழுதியிருக்கிறார்.

புழுதியினின்று அவர் ஏழைகளை உயர்த்துகின்றார்; குப்பையினின்று வறியவரைத் தூக்கிவிடுகின்றார்; உயர்குடியினரோடு அவர்களை அமர்த்துகின்றார்! மாண்புறு அரியணையை அவர்களுக்கு உரிமையாக்குகின்றார்! உலகின் அடித்தளங்கள் ஆண்டவருக்கு உரியவை! அவற்றின் மேல் அவர் உலகை நிறுவினார்! (1 சாமுவேல் 2:8) . என்பதனை அறிந்து நாமும் கடவுளின் வழிநின்று நிலைவாழ்வு உரிமையாக்கிக் கொள்வோம்.

*இயேசுவுக்கே புகழ்*

**-லீமா விக்டோரியா**

# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்...